# ஞானோபதேசம்

## சாந்திப்பிரியா



ஸ்ரீ ஸ்ரீ கணபதி சச்சிதானந்த ஸ்வாமிகள் கூறிய இந்தக் கதை மகாபாரதத்தில் வருகின்றது. பாண்டவர்களுக்குப் பின் ஆண்டு வந்த பரிக்ஷித் என்ற மன்னனுடைய காலத்தில் நடந்தது. அவருடைய காலத்தில் தொய்மியா என்ற ஒரு முனிவர் காட்டில் வசித்து வந்தார். அவர் தன்னிடம் கல்வி பயின்று வந்த சிஷ்யர்களுக்கு தன்னுடைய வாயைத் திறந்து எதையுமே சொல்லிக் கொடுத்தது இல்லை என்றாலும் அவர்களுக்கு எப்படி அறிவு புகட்டினார் என்பதே மர்மமாக இருந்தது. அவரிடம் பாடம் பயின்ற அனைவருமே மேதாவிகளாக ஆனார்கள் என்பது மட்டும் உண்மை. காலம் கடந்தது. அவரிடம் உபமன்யு என்ற மாணவன் சிஷ்யனாகச் சேர்ந்தான். பல வருடங்கள் கடந்தும் தனக்கு அவர் எந்த போதனையும் செய்யவில்லை என்ற குறையுடன் அவரிடம் சென்று கேட்டான் ‘குருஜி, எனக்கு எதுவுமே சொல்லித்

தரவில்லையே. நான் என்ன செய்யட்டும்?' குரு கூறினார் 'பக்கத்து ஊருக்கு நம் மாடுகளை ஓட்டிச் சென்று புல்லில் மேய விட்டு வா'. சில நாட்கள் கழிந்தன. மாணவன் நல்ல உடல் வலிமையுடன் இருந்தான். குரு அவனை அழைத்து 'நீ என்ன சாப்பிடுகின்றாய்?' என்று கேட்க அவனும் தான் பிட்சை எடுத்து உண்பதாகக் கூறினான். குரு கோபமுற்றார். மற்ற அனைத்து மாணவர்களும் தாம் எடுத்த பிட்சையை தன்னிடம் வந்து தந்து விடுவதாகவும் பின் அவர்களுக்குத் அவர் என்ன தருகின்றாரோ அதையே அவர்கள் உண்பதாகக் கூற, அவன் தன்னுடைய செய்கைக்கு மன்னிப்புக் கோரினான். மறு நாள் முதல் தனக்கு கிடைத்த பிட்சையை குருவிடம் கொண்டு வந்து தந்து விட்டு அவர் கொடுத்ததை மட்டும் உண்டான். சில மாதம் கழிந்தன. அவன் உடல் நிலையில் மாற்றம் இல்லை. நன்றாகவே இருந்தான். குரு அவனை அழைத்து 'நீ இப்பொழுது என்னவெல்லாம் சாப்பிடுகின்றாய்?' என்று கேட்க அவனும் தான் முதலில் பிட்சை எடுத்ததை அவரிடம் தந்த பின் அவர் கொடுத்த உணவு போதவில்லை என்பதினால் மீண்டும் சென்று பிட்சை எடுத்து உண்டதாகக் கூறினான். குரு கோபமுற்றார். மீண்டும் மீண்டும் ஒரே இடத்தில் சென்று பிட்சை எடுத்தால் கொடுப்பவர்களுக்கு உணவுப் பஞ்சம் ஏற்படாதா எனக் கடிந்து கொள்ள தன் தவறுக்கு மன்னிப்புக் கோரினான்.

இன்னும் சில மாதங்கள் கழிந்தன. அவன் உடல் நிலையில் இன்னமும் மாற்றம் இல்லை. குரு அவனை அழைத்து 'நீ இப்பொழுது என்ன சாப்பிடுகின்றாய்?' என்று கேட்க அவனும் தான் காட்டில் அழைத்துச் சென்று மேய்க்கும் பசுக்களின் பாலை கறந்து சாப்பிடுவதாகக் கூற, மீண்டும் குரு தன்னுடைய அனுமதி இன்றி எப்படி மாட்டின் பாலை எடுத்துக் கொள்கின்றாய்? அது திருட்டுத்தனம் அல்லவா என கோபமுற்றார். தன்னுடைய செய்கைக்கு மீண்டும் மன்னிப்புக் கோரினான். இன்னமும் சில மாதம் கழிந்தன. அவன் உடல் நிலையில் எந்த மாற்றமும் இல்லை. குரு ஆச்சரியம் அடைந்து அவனை மீண்டும் அழைத்து இப்பொழுதெல்லாம் உணவுக்கு என்ன செய்கின்றாய் எனக் கேட்க அவன் பசுக்களின் கன்றின்

வாயில் இருந்து வழியும் பாலை அருந்துவதாகக் கூற அவர் கோபமுற்று, கன்றுகள் அவன் நிலையைக் கண்டு வருத்தமுற்று வேண்டும் என்றே தாம் சாப்பிடாமல் தாய் வயிற்றில் இருந்து குடித்தப் பாலை அவனுக்காக வெளியில் துப்பி விடுவதாகக் கூற, அவன் மீண்டும் கவலை அடைந்து தன் செய்கைக்கு மன்னிப்புக் கோரினான். இனி வேறு வழி இல்லை. குருவிடம் இருந்து பெறும் உணவு போதவில்லை. எது வேண்டுமானாலும் நடக்கட்டும் என முடிவு செய்து விட்டு வாழத் துவங்கினான். உணவு பற்றவில்லை என்பதினால் உடல் நலம் குன்றியது. பசி பொறுக்க முடியாமல் ஒரு நாள் காட்டில் இருந்த ஒரு காட்டுச் செடியில் இலையை கிள்ளியதும் வழிந்த பாலைக் அது விஷச் செடி என அறியாமல் குடித்து விட்டான். கண் குருடாகி விட்டது. வழி தெரியாமல் ஆசிரமத்திற்கு திரும்பி வந்தவன் ஒரு பாழும் கிணற்றில் விழுந்து விட்டான். மாடுகள் திரும்ப வந்து விட்டன, ஆனால் சிஷ்யனைக் காணவில்லை என்பதினால் அவனை தேடிக் கொண்டு காட்டிற்கு சென்றார். கிணற்றில் விழுந்து கிடந்தவனின் நிலையைக் கண்டார். அவன் ஞானம் பெறும் நிலைக்கு வந்து விட்ட மன நிலைமையில் இருப்பதை தெரிந்து கொண்டார்; அவனை அதில் இருந்து மீட்காமல் அவனிடம் தாம் கிணற்றில் இருந்து மேலே வரவும், கண் பார்வை பெறவும் அஸ்வினி தேவர்களை துதிக்குமாறு கூறினார். அவனும் தன்னை அறியாமல் ஒரு அருவி போல அஸ்வினி தேவர்களை துதித்துப் பாடத் துவங்க அவன் மனம் தெளிவாகியது. அவனுடைய தோத்திரத்தினால் மனம் மகிழ்ந்த தேவர்களும் அவன் முன் தோன்றி அவனுக்கு ஒரு பாத்திரத்தில் உணவு கொடுத்து அதை உண்டால் கண் பார்வை பெற்று பெரும் பண்டிதனாக மாறி விட முடியும் எனக் கூற அவனோ தன்னுடைய குருவின் ஆணையின்றி அதை உண்ண முடியாது என்று கூறி விட்டான். அதைக் கேட்ட அவர்கள் மிகவும் மகிழ்சி அடைந்து அவனை ஆசிர்வதித்தனர். கிணற்றில் விழுந்து கிடந்தவன் தூக்கத்தில் இருந்து எழுந்தவன் போல விழித்தான். மேலே ஏறி வந்தவனை குரு ஆசிர்வதிக்க அவன் பெரும் பண்டிதனாக மாறினான். இது உணர்த்தும் பாடம் என்ன ? குருவானவர் தன் வாயை திறந்து பாடம் போதித்தால் மட்டுமே அறிவு பெற முடியும் என்பது தவறு. சிஷ்யனுக்கு எந்த நேரத்தில் எந்த

விதத்தில் அறிவைக் கொடுக்க வேண்டுமோ அதை ஒரு குரு நிச்சயம் தருவார். கிணற்றில் விழுந்து கிடந்தவனை அஸ்வினி தேவர்களை பிரார்திக்குமாறு ஆணையிட்டு, மந்திர போதனையை ஆத்மார்த்தமாக அவர் கொடுக்க, அபிமன்யு மனதில் அந்த மந்திரங்கள் தோன்றின. ஞானம் அடைந்தான். இதுவே குரு – சிஷ்யனுக்கு உள்ள உறவின் முறை.

# Gnanopadesa

## Santhipriya



This is a story from Mahabharatha as told by Sri Sri Ganapathi Sachithanantha Swamigal. King Parikshit, took over the reins of power after the Pandavas left the throne. There lived a saint named Toimiya who lived in the forest and it was a mystery how he imparted knowledge to his disciples, though he did not open his mouth and taught them anything. However all those who were his disciples

were big scholars. A disciple named Upamanyu was one amongst them. Before he attained wisdom, one day he went to his master, with full of sadness in mind and expressed that he did not gain any knowledge from his Guru. Frustrated, disciple asked his Guru as to what should he do to gain knowledge. The Guru asked him to take the cattle to the forest for gazing. Few days passed and the Guru asked him 'How are you managing food? Upamanyu said he lived on alms. Guru got angry that he ate the alms without permission since all the other students used to first submit the alms to the Guru and eat only what was given to them by the Guru. He apologized for his action and from the next day onwards he brought the alms and gave it to his Guru and partook only what he gave him. A few months passed. There was no change in his physical condition. The Guru called him and when asked how he managed the food now, Upamanyu said whenever the food received by him was insufficient, he took alms again and partook it. Guru got annoyed and the disciple apologized.

Few days passed and the physical condition of the disciple remained unchanged and he was as strong as before. When the Guru posed the same question how he sustained, he replied that he was milching the cows and drinking the milk. This angered the Guru who admonished him for drawing milk from the cow without his permission and Upamanyu apologised. Few days passed, again there was no change in the physical condition of the disciple and when Guru asked the same question on food, he replied that he drank the overflowing milk from the mouth of calves which drank milk from the fodder of their mother. Guru was annoyed and chided him that it was not an acceptable act to him. The disciple apologised.

From next day onwards though he felt hungry, he did not eat anything. However in the afternoon when he could not tolerate his hunger, he plucked some leaves from some plant, squeezed them and drank the liquid fell from them. The leaves were poisonous and he became blind. While returning back, he fell into a well. When the cows returned to the ashram without Upamanyu, the Guru went in search of him and found him inside the deep well. Without rescuing him, he advised him to chant hymns on Ashwini deities to gain back eye sight and to come out from the well, whereas Upamanyu had not been taught the chant on Ashwini deities. Inspite of it he suddenly started singing hymns in praise of the deities who pleased with his hymns restored his eye sight. They offered him food to eat before restoring the eye sight, but the disciple refused to accept the food unless his Guru's permission was taken. Pleased with his sincerity, the deities blessed him and he came out of the well. Suddenly he felt as though he had woken up from sleep. He became a great scholar later by the grace of the Guru. What lesson does it convey? A Guru is sure to impart knowledge to the disciple by different means and therefore the Guru of Upamanyu waited for the ripe time till Upamanyu got maturity in mind and imparted the hymns on Ashwini deities in silence. This is the pattern of the Guru-disciple relationship.